# வடக்கத்திய பூமி (Pumi Northern)




**Population:**
39,000 (2000)
48,100 (2010)
59,200 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

**மேலோட்டம்:**

**மற்ற பெயர்கள்:** Xifan, Hsifan, Northern Pumi, Chrame, Ch'rame, Tshomi, Sichuan Pumi

**மக்கள்தொகை:** 30,000 in China (1987, Language Atlas of China)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங். ஷியங் மொழி

**மொழி வழக்குகள்:** 4 (Tuoqi, Sanyanlong, Taoba, Zuosuo)

**திபெத்திய புத்தமதம்:**100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** PMI

**கிறிஸ்துவத்தின் நிலை**




**வசிப்பிடம்:** சிசுவான் மாநிலத்தின் தென்மேற்கில் உள்ள பரந்தத் தனிமையான பகுதி சுமார் 40,000 வடக்கத்திய பூமி மக்களுக்கு இருப்பிடமாக உள்ளது. பெரும்பாலானோர் "செழிப்பானச் சொத்து" என விவரிக்கப்படும் மூளி மாவட்டத்தில் வசிக்கின்றனர். நதிகள், குறிப்பாக லீதாங் (Litang) நதி, தங்கம் சுமந்து வருவதால் நல்ல வருவாயைத் தருகிறது. சிதறியிருக்கும் சாமெய் மக்களை மூளிலிருந்து 200 கி.மீ. தொலைவில் மேற்கில் ஷிமியன் (Shimian) மாவட்டத்தில் யர்லுங் நதிமட்டும், வடக்கில் வென்சுஅன் மாவட்டம் வரைக்கும் காணமுடியும், சுமார் 7,000 பூமி மக்கள் யுன்னான் மாநிலத்தின் வடக்குப் பகுதியில் நிங்லாங் (Ninglang) மாவட்டத்தின் யொங்நிங் (Yongning) பகுதியில் வசிக்கின்றனர்.

**அடையாளம்:** முந்தைய நாட்களில் இவர்கள் பொதுவாக "மேற்கத்தியக் காட்டுமிராண்டிகள்" என்ற பொருளுடைய ஷிபன்(Xifan) என்ற இழிவுப்படுத்தக்கூடிய பெயரால் அறியப்பட்டார்கள். இப்பெயர் இவர்களை மட்டுமல்லாமல் சிலநேரங்களில் எல்லாத் திபெத்தியர்களைக் குறிக்கவும் சீனர்களால் பயன்படுத்தப்படுகிறது. பழைய ஆவணங்கள் இவர்களைச் சாமெய் (Chrame) மக்கள் எனக் குறிப்பிடுகின்றன; ஆனால் மொழி சம்பந்தமான ஆவணங்கள் இவர்களைச் சீராக எப்பொழுதும் வடக்கத்திய பூமி மக்கள் எனக் குறிப்பிடுகின்றன. அரசாங்கம் இவர்களைத் தனித்தன்மையான சிறுபான்மை இனமாக அங்கீகரிக்கவில்லை மாறாக இவர்களைச் சிசுவான் பகுதியில் வாழும் திபெத்தியர்கள் பட்டியலில் இணைத்துள்ளது. வடக்கத்திய பூமிக்களுக்குத் தனி மொழி மற்றும் வரலாறு இருந்தாலும்கூட இவர்கள் தங்களைத் திபெத்தியர்கள் என்றே அறிமுகப்படுத்திக்கொள்கின்றனர்.

**மொழி:** வடக்கத்திய பூமி மொழியில் மூன்று வித்தியாசமான உச்சரிப்புப் பிரிவுகளும் ஐந்து வட்டார மொழி வழக்குகளும் உள்ளன. யுன்னான் மாநிலத்தில் பேசப்படும் தெற்கத்திய பூமி மொழிக்கும் இம்மொழிக்கும் இடையே 60% ஒற்றுமையுண்டு.

**வரலாறு:** மூளி முன் நாட்களில் ஒரு புத்த மடத்தை மையமாகக் கொண்ட நகரமாகும். கி.பி. 1950 வரைக்கும் ஒரு ராஜா இங்கே ஆட்சி செய்தார். இவர் ஒருகாலத்தில் 9,000 சதுர மைல் பரப்பளவு உள்ளப் பகுதியை ஆட்சி செய்தார். மூளியை ஆட்சி செய்தவர்கள் மன்சு (Manchu) இனத்தவர்கள் எனக் கூறப்படுகிறது. கி.பி. 1723 ல் அரியணைக்கு வந்த மன்சு இன மகாராஜா யங்செங்கிற்கு (Yungcheng) இவர்கள் செய்த வீரமான சேவைக்குப் பதிலாக ஆட்சி செய்யும் நித்தியமான உரிமை இவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ராஜா மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கை மற்றும் பொது வாழ்க்கை இரண்டின் மேலும் முழு அதிகாரத்தோடு ஆட்சி செய்தார். கிராமமக்கள் நகரத்திற்குக்கீழ் சிதறிய நிலையில் மலைப் பக்கங்களில் மரத்திலான கூடாரங்களில் வசித்தனர். இவர்கள் எப்பொழுதும் தங்கள் பூசாரி ராஜா மற்றும் சுரண்டி வாழும் அவருடைய கையாள்களுடைய பயத்தில் வாழ்ந்தனர்.



**பழக்கவழக்கங்கள்:** கி.பி. 1981 ல் 131 குடும்பங்களில் நடத்தப்பட்ட ஆய்வில் 52% திருமணங்கள் ஒருதுணை மணமாகவும் 32% திருமணங்கள் பல பதி மணமாகவும் (சகோதரர்கள் ஒரே மனைவியைப் பகிர்ந்துகொள்வது) 16% திருமணங்கள் பலதார மணமாகவும் (சகோதரிகள் ஒரே கணவனைப் பகிர்ந்துகொள்வது) இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. "மூளியின் ராஜா விருந்தினர்களை உபசரிப்பதில் அதிக விருப்பமுடையவர். விருந்தினர்களுக்குக் காய்ந்த ஆட்டுக்காலும், கட்டைவிரல் அளவிற்குத் தடிப்பான புழுக்கள் (Maggot) நெளிகிற நாக் (பெண் யாக், நாக் எனப்படும்) பாலாடைக்கட்டியையும் கொடுப்பது வழக்கம்" ஜோசப் ராக் குழுவினர் அதைப் பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்தனர். "அதைப் பெற்றுக்கொள்ள அவர்கள் புலிகளைப் போலச் சண்டையிட்டுக்கொண்டனர்"

**மதம்:** அனைத்து வடக்கத்திய பூமி மக்களும் திபெத்திய புத்தமதத்தைப் பின்பற்றுகின்றனர்.

**கிறிஸ்துவம்:** சீன இனக்குழுக்களில் மிகவுமே சந்திக்கப்படாத ஓர் இனம் வடக்கத்திய பூமியாகும். வடக்கத்திய பூமிக்கள் மத்தியில் சபையோ விசுவாசியோ இருந்ததாக இதுவரை எந்தத்தகவலும் இல்லை. சமீபச் சில வருடங்களில் விசுவாசம் நிறைந்த சில கிறிஸ்தவர்கள் மூளிக்குச் சென்று இவர்கள் மத்தியில் பணிசெய்ய முயற்சி எடுத்துள்ளனர்; இருந்தும் இந்த விலைமதிப்பற்றத் தனித்தன்மையான இம்மக்கள் மத்தியில் அறியப்பட்ட விசுவாசிகள் இந்நாட்களில் கிடையாது.